15.07.2026
அ.வ.எண். 77/2018

வா.சா.2 – மணி

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் நிலம் வாங்கி விற்கும் இடைத்தரகராக வேலை செய்கிறேன் என்றால் சரிதான். வாதியும் நிலம் வாங்கி விற்கும் தொழில் செய்கிறார் என்றால் சரிதான். வாதி காலி மனையை வாங்கி அதில் வீடு கட்டி விற்கும் தொழில் செய்கிறார் என்றால் சரிதான். அந்த வகையில் வாதி எனக்கு நண்பர் என்றால் சரிதான். வாதியும் பிரதிவாதியும் எந்த தேதியில் கிரைய ஒப்பந்தம் செய்தார்கள் என்றால் 2018 ம் வருடம் செய்தார்கள். தேதி ஞாபகமில்லை. கிரைய ஒப்பந்தத்தில் நான் சாட்சி கையெழுத்துபோடவில்லை. யார் யார் சாட்சி கையெழுத்து போட்டார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் 2, 3 பேர்கள் போட்டார்கள். ஆள்கள் தெரியாது. தாவா சொத்தின் நான்குமால்கள் எனக்கு தெரியாது. கிரைய ஒப்பந்தத்தை யார் எழுதினார்கள் என்றால் அவர் பெயர் தெரியாது. பிரதிவாதியை நான் பார்த்துள்ளேன். பிரதிவாதியின் தகப்பனார் பெயர், அப்பா பெயர் மற்றும் அவர் எங்கு தங்கியுள்ளார் என்று எனக்கு தெரியாது. ஒப்பந்தம் செய்வதற்கு முன்பு வீடு கட்டப்படவில்லை. ஒப்பந்தம் செய்வதற்கு முன்னர் தாவா சொத்தில் கட்டிடம் இருந்தது என்றால் சரியல்ல. நான் பாலகிருஷ்ணாபுரம், பெரியார் நகரில் குடியிருக்கிறேன் என்பதை காட்ட ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்தின் அளவு 20x 60 அடி அளவாகும். வாதியிடம் தாவா சொத்து கிரையத்திற்கு வருவதாக நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் கூறுவதுபோன்று தாவா சொத்தை பொறுத்து வாதியும் பிரதிவாதியும் கிரைய ஒப்பந்தம் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா கிரைய ஒப்பந்தம் கடனுக்காக எழுதப்பட்டது என்றால் சரியல்ல. கிரையம் செய்ய ஒப்புக்கொண்டு பிரதிவாதி முன்பணம் எதுவும் பெறவில்லை என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்தம் எழுதும்போதோ அதை

பதிவு செய்யும்போதோ நான் உடன் இல்லை என்றால் பணம் கொடுக்கும்போதுதான் இருந்தேன். வாதி எனது நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை :- இல்லை

PADMANABAN VENKATASAMY

Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.07.15 17:44:34 +0530

Principal District Judge,
Dindigul.